18.05.2023

CC.3/2012

PW–2, கண்ணன்

3,4 எதிரிகள் தரப்பில் கு.வி

நான் மேற்படி அலுவலகத்தில் 2018 லிருந்து உதவியாளராக பணியாற்றி வருகிறேன். எதிரிகளுக்கும் வாதிக்கும் இடையே தமிழ்நாடு சேவா சங்கத்தில் நடந்த அனைத்து பிரச்சினைகளும் எனக்கு தெரியுமா என்றால் 2018 க்கு பிறகு ஓரளவு தெரியும். ம.சா,ஆ.17, 1வது எதிரிக்கு சார்பு செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக எங்களது அலுவலகத்தில் வந்து யாரேனும் உத்தரவு நகல் பெற்றுக் கொண்டால் அவர்களிடம் நேரடியாக கையொப்பம் வாங்கி கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். தபாலில் அனுப்பினால் கையொப்பம் பெறுவதில்லை. 1வது எதிரிக்கு தபாலில் உத்தரவு நகலான ம.சா.ஆ.17 தபாலில் அனுப்பப்பட்டதற்கான ரசீது அலுவலக கோப்பில் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி உத்தரவானது சம்மந்தப்பட்ட தேதியில் போடப்படவில்லை என்றும் வாதிக்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.17 ல் உத்தரவில் சரத்துக்கள் எனக்கு தெரியுமா என்றால் படித்து பார்த்துவிட்டதால் தெரியும். தமிழ்நாடு சேவா சங்கத்தில் உள் விதிகள் தெரியுமா என்றால் தெரியாது. தமிழ்நாடு சேவா சங்கத்தின் நிர்வாகிகள் பதவி ஏற்ற பிறகு 3 வருடம் தான் பதவியில் இருப்பார்கள் என்றால் சரிதான். மெர்சி அன்னபூரணி செயலாளராகவும், 1வது எதிரி தலைவராகவும் 01.07.1998 ல் பதவி ஏற்றார்கள் என்றால் சரிதான். அவர்களுடைய பதவிக்காலம் 01.07.2001 ல் முடிவடைகிறது என்றால் சரிதான். 01.07.2001 முதல் 19.11.2010 வரை புகார்தாரரின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. ம.சா.ஆ.17 ல் கோப்பில் பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டதற்கான எந்தவித உத்தரவும் இருக்கிறதா என்றால் இல்லை. 2001 ல் காலாவதியான பதவியை 19.11.2010 எவ்வாறு நீட்டிக்க முடியும் என்றால் இடைப்பட்ட நேரத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. சாட்சி தற்போது 19.11.2010 அன்று பதவிக் காலத்தை நீட்டித்து எந்தவித உத்தரவும்போடவில்லை என்றும் நிர்வாகிகள் செயல்பட அறிவுறுத்த மட்டும் சொல்லப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளிக்கிறார். மேற்படி உத்தரவு மறைமுகமாக பதவியை நீட்டிக்க போடப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. மேற்படி மாவட்ட பதிவாளரின் உத்தரவானது எந்தவித சிவில் மற்றும் மாண்புமிகு உயர் நீதிமன்ற உத்தரவின்படி போடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நிர்வாகிகளை தேர்ந்தெடுத்த பிறகு படிவம் 7 ன் மூலம் மாவட்ட பதிவாளரிடம் அனுமதி பெற்ற பிறகு தான் சங்கம் செயல்பட வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் 01.07.2001 க்கு பிறகு படிவம் 7 ல் அனுமதி வேண்டி இந்த வாதி செயலாளராக பதவி வேண்டி ஏதாவது மனு கொடுத்துள்ளரா என்றால் தெரியாது. மெர்சி அன்னபூரணியை அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கம் செய்து அதை மாவட்ட பதிவாளர் அதை ஏற்றுக் கொண்டு ஒப்புதல் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அதற்கான உத்தரவு தான்

அது எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.03.2006 ல் மெர்சி அன்னபூரணி செயலாளர் தலைவர், ஆகியோர்களை தேர்ந்தெடுத்து மாவட்ட பதிவாளருக்கு அனுமதி வேண்டி படிவம் 7 ல் அனுப்பியுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி படிவம் 7 ஆனது நிராகரிக்கப்பட்டதற்கான உத்தரவு என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் நகல் என்பதாலும் என்னுடைய கோப்பில் இல்லாததாலும் அது குறித்து சொல்ல முடியாது. மேற்படி மாவட்ட பதிவாளரின் உத்தரவை எதிர்த்து மெர்சிஅன்னபூரணி மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் மாவட்ட பதிவாளரை தரப்பினராக சேர்த்து ரிட் மனு 6541/2006 தாக்கல் செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காண்பித்ததால் உத்தரவை பார்க்கிறேன். நாங்கள் உத்தரவு போட்டப்பட்ட பின்புதான் ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 வது எதிரி சங்கத்தில் உள் விதியை மாற்றம் செய்து 14.11.2003 அன்று தீர்மானம் போட்டு அதை பதிவாளருக்கு அனுப்பி வைத்து அதன் அடிப்படையில் அரசு G.O வெளியீடு செய்துள்ளது என்றால் சரிதான். அது எ.த.சாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஜி.ஓ வை எதிர்த்து மெர்சி அன்னபூரணி மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு 2034/2010 தாக்கல் செய்து அதுவும் 12.03.2019 ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.17 ல் அ.வ.எண்.504/2004 திருமங்கலம் உரிமையியல் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் தான் அந்த உத்தரவு போடப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. உரிமையியல் நீதிமன்றத்தில் மெர்சி அன்னபூரணி மற்றும் ராமசாமி போடப்பட்ட தீர்மானங்களை செல்லாது என உத்தரவு போடப்பட்டுள்ளதை வைத்து பொய்யாக மாவட்ட பதிவாளரால் ம.சா.ஆ.17 உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னை மாவட்ட பதிவாளர் சாட்சி சொல்ல அனுமதிக்கவில்லை என்றும் மெர்சி அன்னபூரணிக்கு வேண்டி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டதில் தவறு இருப்பதாக கூறி அதை பொறுத்து மட்டும் மறு குறுக்கு விசாரணை**

**ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்த போது மெர்சி அன்னபூரணி 2010 முதல் தமிழ்நாடு சேவா சங்கத்தின் உறுப்பினர் என்றால் சரியல்ல என்பதற்கு பதிலாக சரிதான் என தட்டச்சு செய்யபட்டுள்ளது. சாட்சி தற்போது மெர்சி அன்னபூரணி 2010 முதல் மேற்படி சங்கத்தில் உறுப்பினர் இல்லை என சாட்சியம் அளிக்கிறார்.**